உ

செட்டிநாடு

திங்கள் இருமுறை

சமய வளர்ச்சி, மொழியாக்கம் கருதி உழைப்பது.

மலர்-26] துன்முகி-மாசி-10 21-2-57 [இதழ்-9

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன் செட்டியார்



மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஆடல்ஆனே றூரும்அடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய் :-சம்பந்தர்



குறிஞ்சி

பகற்குறியில் வந்து தலைவியைக்கூடி, அவளைத் தோழியர் கூட்டத்தில் விடுத்துத் தன்னூர்க்குச் செல்லுந் தலைவனைத் தோழி நெருங்கி விருந்தெதிர் கொள்ளும் உலகியல் கூறுவாள் போன்று வரைவு பயப்பக் கூறியது.

கோடு துவையாக் கோள்வாய் நாயொடு
காடுதேர் நசைஇய வயமான் வேட்டு
வயவர் மகளி ரென்றி யாயிற்
குறவர் மகளிரேங் குன்றுகெழு கொடிச்சியேம்
சேணோ னிழைத்த நெடுங்காற் கழுதிற்
கான மஞ்ஞை கட்சி சேக்கும்
கல்லகத் ததுவெம் மூரே செல்லாது
சேர்ந்தனை சென்மதி நீயே பெருமலை
வாங்கமை பழுனிய நறவுண்டு
வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே 276

:-தொல்கபிலர்

தலைவனே! கொம்பை ஊதி ஒலி செய்து கௌவிக் கொள்ளும் நாயோடு காட்டில் ஆராயும் விருப்பமுடைய வலிய மானை வேட்டையாற் கொள்ளும் வீரரின் மகளிரென எம்மைக் கூறுவாயாயின் வேட்டுவ மகளிரல்லேம். யாம் குறமகளிரேம். மலையில் வாழும் கொடிச்சியரேம். தினைக்காவலன் கட்டிய நீண்ட கால்களையுடைய கட்டுப் பரணில் காட்டுமயில்கள் தங்கியிருக்கின்ற எமது ஊர்இம்மலையகத்தேஉள்ளது. நீ இப்பொழுது நின் ஊர்க்குச் செல்லாது எம் ஊரை அடைந்து பெரிய மலையிலுள்ள வளைந்த மூங்கிலால் ஆக்கிய குழாயில் நிரப்பி முற்ற வைத்த கள்ளை உண்டு வேங்கை மரத்தையுடைய முன்றிலில் யாம் அயருங் குரவைக் கூத்தையுங் கண்டு செல்வாயாக.

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்தபண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

தும்முவதும் இருமுவதும் துரும்பு கிள்ளுவதும் பற்கடிப்பதும்போல்வன புண்ணியமா? பாவமா? சாத்திரம் அவற்றை விதிக்கவோ, விலக்கவோ செய்யாது. வேறெம்மொழியிலும் அர்ச்சனை செய்யக்கூடாது என்ற கொள்கை எச்சாத்திரத்திரத்திலுங் காணப்படவில்லையென்பது உண்மையாயினும் அவ்வர்ச்சனை ஒன்றினும் படாதனவற்றுளடங்கித் துரும்புகிள்ளுதல் போன்றதொரு விருதா வினையாகலின் அதனை எச்சாத்திரமும் தான் கூறும் விலக்குப் பகுதியிற் சேர்த்திலதெனக் கோடலே அறியுமுறையாமென்க. மேலும் அவ்வர்ச்சனை சாத்திரோக்தமாயின் அதற்கான விதியை எச்சாத்திரத்திலிருந்தாவது அவர் எடுத்துக்காட்டிவிடலாம். வாதமே முடிந்துவிடும்.

‘தமிழைத் தாய்மொழியாக் கொண்ட தமிழர்கள், அதைத் தங்கை மொழியாகவோ, வேறு உறவின்முறை மொழியாகவோ எக்காலத்தும் நினைக்கமுடியாது. தாய்மொழிக்குக் கொடுக்கும் உயர்வுக்கும் வரம்பு உண்டோ?’ (25-5-55 தமிழ்நாடு) என்கிறாரவர். மொழி தன்னளவில் உயர்வுடையதாயின், அதைத் தாயென்றாலென்ன? தமக்கையென்றாலென்ன? பாட்டியென்றாலென்ன? எவ்வுறவு முறையும் அவ்வுயர்வைக் கெடாது. மேலும் தாய், தமக்கை, பாட்டி முதலிய உறவின் முறையாருள் சிலர்க்கு வரம்புள் நின்றும், சிலர்க்கு வரம்பு கடந்தும் உயர்வு கொடுப்பதெப்படி? நவீனர் அதை ஒரு திருட்டாந்தத்தால் விளக்குக. அவர் தமிழைத் தாயெனக் கொண்டதாலேயே அதற்கு உயர்வு கொடுக்கிறாரெனத் தெரிகிறது. தாய்க்கு உயர்வுகொடுக்க என்பது விதிதான். ஆனால் அதற்கும் வரம்புண்டு. உமாதேவியார் தக்கயாகத்தில் தம் பெற்றோரைச் சபித்தார். எச்சதத்தன் செய்த கொடுமையை அவன் மனைவி செய்திருந்தால் மகனாராகிய சண்டேசுரர் அவளையுந் துண்டாடியிருப்பர். கோட்புலியார் தம்

தாயையுங் கொன்றது 'தந்தையார்' என்று தொடங்கும் அவர் சரிதச் செய்யுளிற் பிரசித்தம். 'எத்தாயர் எத்தந்தை...எவர் நல்லார்? செத்தால் வந்து உதவுவார் ஒருத்தரில்லை' ஒருவன் இருக்கும்போதும், செத்தபிறகும் அவனுயிரோடு ஒட்டியிருந்து அதற்கு உதவிக்கொண்டிருப்பது சைவசமய மொன்றே. அவ் வுண்மையை யுணர்ந்த சைவாபிமானி தன்னைப்பெற்ற தந்தை தாயர் அச்சமயத்துக்குத் துரோகிகளாயின் அவருக்கு வரம்பு கடந்து உயர்வு கொடுக்கவே மாட்டான். அவரைத் தனக்குத் துரோகிகளெனவே அவன் எண்ணி யொழுகுவான். அப்படியே தமிழ் தாயுறவி லிருந்தாலும் சைவத் துரோகமான கொள்கை களைத் தாங்கித் திரியுமாயின் அந்த அளவில் அதற்கு உயர்வு கொடுக்க மாட்டான் சைவன். 'திக் வித்யாம் அசிவாச்ரயாம்' என்பது சிவாஞ்ஞை. சிவபெருமானை ஆசிரயியாத வித்தையை (நூலை)த் தீக்கு இரையாக்கு என்பது அதற்கருத்தம். அது எந்தமொழி நூலாயினு மாக. சைவனால் அவ்வாஞ்ஞையை மீற முடியாது. மீறுவானாயின் அவனை அந்த அப்பன் சும்மாவிடான். 'ராவணனைத் தமிழனாகக்கொண்டு ராவண காவியம் படிப்பது தவறு என்பதை உணரவேண்டும்' (8-10-54 தினமணி) என நவீனருங் கூறி அக் காவியத் தமிழுக்கு உயர்வுகொடுக்க மறுக் கிறார். தமிழர்ச்சனையும் அக்காவியம் போன்றதே. அவர் தாய் மொழிக்குக் கொடுக்கும் உயர்வுக்கு வரம்புண்டோவெனக்கேட் பது சைவசமயத்துக்குள்ள உயர்தனிச் செம்மையைக் கீழ்ப்படுத் தவே யாம். அவருக்குத் தமிழ் சொந்தமொழி யாவது போல் சைவம் சொந்த சமயமாதுமென நான் கருதுகிறேன். அங்ஙனமா யின் அவர் அச்சமயத்தை எவ்வுறவுச் சமயமாகக் கூறி மகிழ் கிறார்? அம்மகிழ்ச்சி தமக்கில்லை யென்பாராயின் அவர் சைவஞ் சாராத் தமிழரென்பது தேற்றம்.

'மக்கள் சமுதாயத்திற்குப் பயன்படாத சமயம் பயனற்றுப் போய்விடும்' (24–10–55 தமிழ்நாடு), 'மதம் மக்களை மதியா திருந்தால் மக்கள் மதத்தைப் புறக்கணிப்பார்கள்' 'மதம் மக்க ளுக்குப் பயன்படவேண்டும். பயன்படாவிடில் புதைக்கப்படும்' (16–6-55தமிழ்நாடு), 'சமயம் மக்களைப் புறக்கணித்துவிட்டதா லேயே இக்காலத்தில் மக்கள் சமயத்தைப் புறக்கணிக்கின்றனர்'

(11-7-55 தமிழ்நாடு) என்கிறார் நவீனர். மதம் மக்களை மதிக்க வேண்டுமாமே. அது அவர் பாதங்களில் மலர் பறித்திட்டு வணங்கவேண்டும்போலும். அப்படி எந்த மதமும் மக்களை மதியாது. மதிக்கும் மதம் மதமாகாது. மக்கள்தான் மதத்தைமதிக்க வேண்டும். நவீனரின் உபதேசங்களெல்லாந் தலைகீழாகவே யிருக்கும். மதங்கள் மக்களுக்குப் பயன்படவே உளவாயின. பயன்பட்டுக்கொண்டுமிருக்கின்றன. மேலும் பயன்படவில்லை யென்ற காரணத்தாற் புதையுண்டு வருவதொரு சமயம் நவீனருடைய தன்றாயின் அச்சமயத்துக்காக அவர் துக்கிக்க வேண்டாம். மதம், சமயம் என அவர் பொதுப்படச் சொன்னார். அதிற் பசையில்லை. ஆயினும் அவர் கருதியது சைவமேயாம். அதை 'நமது சமயம் மக்களைப் புறக்கணித்ததினால்தான், பின்னர் மக்கள் நமது சமயத்தைப் புறக்கணித்தார்கள்' (27-6-55 தமிழ்நாடு) என அவர் கூறுவதாலறிக. அகலிகை கற்பழிக்கப்பட்டாள். அதனால் அவளுக்குச் சாபங் கிடைத்தது. அவள் கல்லானாள். அத்தீவினை அவளால் நுகரப்பட்டாயிற்று. அவள் முன்போலானதும் அவளைப் பர்த்தாவாகிய கௌதமர் ஏற்றுக்கொண்டார். அப்படியே சைவத்தை விட்டு விலகினாரும் விலகுவாருமுளர். ஆயினுமென்? 'சுற்றிப்போயுஞ் சுங்கத்துறை சேர்ந்தான்' என்பது பழமொழி. ஆகலின் எப்படியும் எல்லா ஆன்மாக்களும் சைவத்திலே வந்து சேரும். அவற்றின் பிறவிக் கடலுக்கு முத்திக்கரை அச்சமயத்திற்றானுண்டு. அச்சமயமும் அவற்றை ஏற்று உய்விக்கும். அது சத்தியம். ஆகலின் அச்சமயம் யாரையும் புறக்கணிக்கவில்லை யென்பதை நவீனர் அறியவேண்டும். அகலிகை கற்பழிந்ததற்குக் கௌதமரா காரணம்? புத்திசாலி ஆமெனச் சொல்லமாட்டான். அப்படியே சைவத்தைப் புறக்கணித்துவிட்டுப் போயினாரும் போவாருமே தம் போக்குக்குக் காரணம் அச்சமயமேயெனச் சொல்க, அல்லது நவீனரே சொல்க. அச்சொல் செல்லாது. கற்பழிந்த ஒருத்தி அவ்வழிவுக்குத் தன் கணவனே காரணமெனக் கூறி அவன்மேற் குற்றஞ் சுமத்துவதும், அதை மற்றவர் ஆதரிப்பதும் போன்றதே அச்சொல். பாற்கடலுட் பிறந்தமீன் பாலை யுண்ணாமல் வேறு பலவற்றை யுண்ணும். அந்தப்பால் புறக்கணித்ததாலா அஃதப்படி யுண்கிறது? இல்லை சைவத்துள்ளும் அம்மீனனையாருளர். அவர் அச்சமயத்தை விட்டுப் போவார்-

அதற்கு அவர் பிறவி, அல்லது தவக்குறைவே காரணமாகும். அவரைத் தாங்கிப் பிடிக்கிறார் நவீனர். முன்னர்ச் சைவந்தான் மக்களைப் புறக்கணித்ததாம். பின்னர்த்தான் மக்கள் சைவத்தைப் புறக்கணித்தனராம். அம்முறற்பாடுகள் அவர்க்குத் தெரிந்த தெப்படியோ? அச்சமயத்தை அங்ஙன் பழிப்பது அடாத செயல். கடவுளை மக்கள் புறக்கணித்தால் குற்றம் கடவுள் மேலது, குருவைச் சீடன் புறக்கணித்தால் குற்றம் குருவின் மேலது, தந்தைதாயரை மகன் புறக்கணித்தால் குற்றம் தந்தைதாயரின் மேலது என்று வாதிக்க அவர் யாண்டுத்தான் கற்றனரோ? சைவம் மக்களைப் புறக்கணித்ததாற்றான் அன்று தமிழகத்தைச் சமணிருளும், பௌத்தாந்தகாரமும் வந்து மூடினவோ? ஆமெனின், அதற்காதார மென்னை? அன்றும் அச்சமயம் சிவபாத விருதயர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், என்போரைப் புறக்கணிக்கவில்லை. எம்நிலையே தாழ்ந்தது. அப்படியிருந்தும் அது எம்மை இன்றும் புறக்கணித்திலது. 'சேரிக்கும்-கோவிலுக்கும் தூரம் கூடாது' (2-6-55 தமிழ்நாடு) என்கிறார் நவீனர். சைவாலயங்களில் மிகுந்த பொருட் செலவில் பல விழாக்கள் நடைபெறுகின்றன. அப்போது சுவாமி, அம்பாமுதலியோர் வீதியுலா வருவார். சேரிவாழ் மக்களுக்குச் சேவை சாதிப்பதே அவ்வுலா. ஆகலின் அச்சமயம் அம்மக்களையும் புறக்கணிப்பதில்லை யென்க. அங்ஙனமாக அது மக்களைப் புறக்கணித்ததென்பது பெரும்பிழை. நவீனர் 'மக்கள் சமுதாயத்துக்குப் பயன்படும்படியாகச் சமயநெறியை அமைக்கவேண்டும்' (24-10-55 தமிழ்நாடு) என்கிறார். சைவத்திற் சரியை கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்கள் உள. அவையும் சரியையிற் சரியை என்பது முதலாகப் பதினாறுவகைப்படும். தான் மக்களுக்குப் பயன்படவேண்டு மென்பதைக் கருதாமலா அச்சமயம் அவற்றையெல்லாம் தன்பால் வகுத்து வைத்துக் கொண்டது? மக்கள் நலனைக் கருதவில்லையானால் அச்சமயத்தால் அவற்றை அங்ஙனம் வகை செய்ய முடியுமா? அத்தகைய சைவ நெறியை" அமைக்கவேண்டுமென்றா லென்னை? புதுவதாகவா? அதற்கவர் யார்? 'சமயத்தில் மாறுதலும், திருத்தமும் ஏற்பட வேண்டுவதற்கு எல்லாக் காரணங்களும் உள்ளன' (11-7-55 தமிழ்நாடு) என்கிறாரவர். சைவத்தில் அவர் விரும்பும் மாறுத

லுந் திருத்தமும் ஏற்படாமையாற்றான்போலும் அச்சமயத்து மக்கள் இன்றுவரை முத்திக்கரை சேராமலிருக்கின்றனர். ஐயோ! பாவம்! அவர் அச்சமயத்தை மாற்றியுந் திருத்தியும் வெளியிடட்டும். அவரே அந்த மாறிய சமயத்தின் ஸ்தாபகரெனக் கொண்டாடப்படுவர். அவர்க்கு அஃதொரு சுக்கிரதசை. அச்சமயத்திற் சேருவதற்கும் இப்பரந்தவுலகில் ஆட்களில்லாமலாபோகின்றனர்?

‘சைவம்...தனது அறியாமையாலும் பிடிவாதத்தாலும் தனக்குரிய சவக்குழியைத் தானே தயாரித்துக்கொண்டது’ (28-6-55 தமிழ்நாடு) என்கிறார் நவீனர். அவ்வாக்கியம் சைவமக்களைக் குறித்துச் சொல்லப்பட்டதா? சைவசமயத்தைக் குறித்துச் சொல்லப்பட்டதா? சைவமக்களைக் குறித்ததாயின், பல சைவர் இசுலாம் கிறிஸ்தவம் முதலிய பிறசமயங்களுக்குப் போய்விட்டனரேயென அந்நவீனர் இரங்கி அங்ஙனங் கூறினாராதல் வேண்டும். அஃதாயின், அங்ஙனம் ஓடிப்போனமக்களே தமது அறியாமையாலும்பிடிவாதத்தாலும்தமக்குரியசவக்குழியைத்தாமேதயாரித்துக்கொண்டனரென்பது அவர் கருத்தெனத் தெரிகிறது. அதனால் சைவமல்லாதவெல்லாம் சவக்குழியென அவர் சொன்னவரானார். சைவசமயத்தைக் குறித்ததாயின், அச்சமயத்தைக் குழிதோண்டிப் புதைக்கவேண்டுமென்ற சங்கற்பமே கொண்டு பகைத்து எதிர்த்தன சமண பௌத்தங்கள். தாம்தம் அறியாமையாலும் பிடிவாதத்தாலும் அச்சமயத்துக்கெனத்தயாரித்த சவக்குழியில் அவையே வீழ்ந்து மண்மூடிப்போயின. அச்சமயமோ அன்றேபோல் இன்றும் நிமிர்ந்து நின்று பேரொளி பரப்பிப் பிரகாசிக்கின்றது. பேரொளியைக் காணக் கண்கூசும். நவீனரும் அச்சமயப் பேரொளியைக் காண்டற்கான திறனற்றுத் தம் கண்களைச் சிக்கெனப் பொத்திக்கொண்டார். உயிருள்ளதைச் செத்ததென்றும், செத்தவற்றை உயிருள்ளனவென்றும் விபரீதம் பேசுவோர் ‘உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத் தலகையா வைக்கப் படும்’ என்ற குறளுக்கு இலக்காவர். சைவம் புதைக்கப்படுமென்றார் நவீனர். புதைக்கவல்ல மனிதனுமுளனா? நூற்றுக்கு நூறு வீதம் மக்கள் ஐந்தும் மூன்றும் ஏழு என்று சொல்லட்டும். எட்டு என்ற உண்மை அவரால் புதைக்கப்பட்டு

விடுமா? 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க' என்றது திருமுறை. அதையே 'பழைய வைதிக சைவம் பரக்கவே' என்றது கோயிற் புராணம். சம்பந்தர் முதலியோர் அதைத்தான் திரும்பக் கொணர்ந்தனர். ஏழெனக் கணக்கிட்ட மக்கட் பெருக்கால் எட்டென்ற உண்மை புதைக்கப்படாதது போல் அச்சமண பௌத்தங்களால் சைவம்புதைக்கப்படமாட்டாதென்பதறிக. ஆகூழுடையார் பெருகிய காலத்து அவருக்காக அச்சமயமும் விளங்கித் தோன்றும் அது சாதம். சர்வமங்கள நிலையமாகிய அச்சமயத்தைச் சவக்குழி தயாரித்துக் கொண்டது, புதைக்கப்படும், செத்துக்கொண்டிருக்கிறது என்ற அமங்கல வாசகங்களுக்கு இலக்காக்கிப் பேசுபவரைநோக்கி நான் இரங்குகின்றேன். நவீனரும் மக்கள்தான். மக்களே செத்துப் புதையுண்டும், எரியுண்டும் போய்க்கொண்டிருக்கிறார். சைவம் அங்ஙனமன்று. அவர்தம் கதியை அதன்மேல் ஏற்றிக்கூறி மகிழாதிருப்பாராக. தமிழர்ச்சனைக் கிடமில்லையானால் சைவம் போய்விடுமென நவீனர் கூறிச் சைவசமூகத்தை அச்சுறுத்துகிறார். 'வச்சிர வரிசிமானத் தளர்வுறு நிலைபேறெய்து முயர்சிவ தருமம்' என்றது காஞ்சிப்புராணம். அதனை அச்சமூகம் அறியும். ஆகவின் அச்சுறுத்திப் பயனில்லை.

தென்னாடுடைய சிவனே போற்றி' என்றது திருமுறை. அதற் கருத்தம் தென்னாடு சிவனுக்கு உடைமை, சிவன் அந்நாட்டைத் தனக்கு உடைமையாகக் கொண்ட உடையவன் என்பதா? சிவன் உடைமை, அந்நாடு அவனைத் தனக்கு உடைமையாகக் கொண்ட உடையது என்பதா? பின்னதை ஏற்பது மதியீனம். முன்னதுதான் அருத்தமாயிருக்கமுடியும். அங்ஙனமாயின் சிவனுடையதாகிய தென்னாடு சைவநாடென்ற பெயருக்கே யுரியது. அதுபற்றித் தமிழ் சைவநாட்டு மொழியென்பதே நியாயம். சைவம் தமிழ்நாட்டுச் சமயம் என்பதும், தமிழ் சைவநாட்டு மொழி என்பதும் எத்துணை வேறுபாடுடையன என்பதை நுனித்து நோக்குக, பிந்தியது தமிழ்வளர்ச்சியைச் சிறிதுந் தடைசெய்யாது. முந்தியதோ சைவசமயவளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும், இசுலாம் அரபுநாட்டில் தோன்றியது. அரபுமக்களுள் எவரர்வது இசுலாம் அரபுநாட்டுச் சமயம், அந்நாட்டுச் சம

யத்தைத மற்றை நாட்டுமக்கள் ஏற்று இசுலாமியராகி மேம்பட்டனர் என அரபுநாட்டுப் பெருமையை முன்னும் இசுலாத்தைப் பின்னும் வைத்து உலகெங்கும் பிரசாரம்செய்தனரா? அச்சமயத்தைக்கொண்டு தம்நாட்டுப் பெருமையைத் தம் இனப் பெருமையைத் தம் மொழிப் பெருமையை விளம்பரஞ் செய்யக் கருதி அச்சமயப் பிரசாரத்தை அவர் செய்திருந்தாராயின் அச்சமயம் உலகெங்கும் பரவியிருக்குமா? மற்றைச் சமயங்களையும் அங்ஙனமே காண்க. சைவசமயம் தமிழ்நாட்டிற் பிறந்ததா? அன்று? என்ற ஆராய்ச்சி ஒருபுறமிருக்கட்டும். அதனைத்தமிழ் நாட்டிற் பிறந்ததாக வைத்துக்கொள்க. அச்சமயப்பிரசாரமூலம் அந்நாட்டுப் பெருமை முதலியவற்றை விளம்பரஞ் செய்வது தான் சமயப் பிரசார ஒழுங்கோ? அப்பிரசாரத்தால் அச்சமயம் மற்றைப் பிரதேசங்களிற் பரவுதலு முண்டோ? பிற சமயத்தார் செய்யும் பிரசார முறையைக் கண்டும் அவர் தெளிகிலர் அவர்க்குத்தான் பிரசார லக்ஷியம் சைவவளர்ச்சி யன்றே. விசுவரூபன் செய்த யாகம் போன்றதே அவர் செய்யும் சைவவப் பிரசாரம். தமிழ்வாழ்க, சைவம் வீழ்க என்கிறது அவரது மனம். தமிழ் முக்கியமல்ல, சைவம் செத்துக்கொண்டிருக்கிறது என்கிறது அவரது வாய். அவர் தமிழைக் கடைக் கணித்துச் சைவத்தைப் புறக்கணிக்கிறவர். 'இதனல் நமது தேசியப் பண்பாடும் வளர்ச்சியும் 100லிருந்து 10சதவிகிதமாகக் குறைந்துவிட்டது' (27-6-55 தமிழ்நாடு) என்கிறுரவர். இதனல்—சைவம் சமூகத்தையும், சமூகம் சைவத்தையும் புறக்கணித்ததால் அப்பண்பாடும் வளர்ச்சியும் அவர் கணக்கிட்ட அளவிற் குறைந்து போகக் காரணம் அப் புறக்கணிப்பன்று, அவர் செய்துவரும் பிரசாரமேயாம். சைவசமூகம் அவர்மேற்றுன் வழக்குத்தொடர வேண்டும்.

'மக்களுக்காகச் சமயமே அன்றிச் சமயத்திற்காக மக்களல்ல. முன்னேற்ற வழியின் குறுக்கே உண்மையான சமயம் நிற்கமுடியாது' (11-7-55தமிழ்நாடு) என்கிறுர் நவீனர். முன்னேற்ற வழியின் குறுக்கே உண்மையான சமயம் நிற்க முடியாதென்பது சாமானிய வுண்மை. அதைக் காண்டற்குத் தீர்க்கபுத்தி வேண்டாம். ஆனல் முன்னேற்ற மென்பதென்ன? அதற்கான வழி

யெது? வேதாகமங்களிற் சொல்லப்பட்டவழி அவ்வழியாகாதா? சைவசமயம் அம் முன்னேற்ற வழியிற் குறுக்கிடுகிறதா? எப்படி? அவற்றையெல்லாம் அச்சமின்றி அவர் விளக்குக. அப்புறம் பார்க்கலாம். மக்களுக்காகச் சமயமேயன்றிச் சமயத்துக்காகமக்க ளல்லவென்றூரவர். அப்படியே மக்களுக்காகத் தேசமேயன் றித் தேசத்துக்காக மக்கள்ல்ல, மக்களுக்காகப் பாஷையேயன் றிப் பாஷைக்காக மக்களல்ல என்பவையுமாம். ஆனல் மக்கள் எதற்காக இருக்கின்றனர்? அதுவன்றோ தலையாய பிரசினை? அதற்குத் தக்கதொரு தீர்வை நவீனர் தருக. அதன் யோக்கி யதையைக் கண்டுதான் இதற்காக இதுவென அவர் கூறியது மதிக்கப்படும். ஆயினும் மேலே சொன்ன மூன்றையும் தேசம், பாஷை, சமயம் என்ற வரிசையில் வைத்து நான் சிறிது விசாரிக் கிறேன், உதாரணமாகப் பாரதம், தமிழ், சைவம் என்ற மூன்றை யும் எடுத்துக்கொள்ளலாம். பாரத தேசத்துக்கு நான்கு திசையி லும் எல்லை யுண்டு. அதாவது வரம்புண்டு. அதனல் அத் தேசம் தனக்கென நாமரூப முடைய தாயிற்று. அவ்வரம்புக் கப்பாலுள்ள நிலத்தில் ஓரங்குலமாவது அவ்வுருவி லடங்கி அப்பெயரை யேற்பதில்லை, அவ்வரம்பைச் சிறிது நகர்த்திப் போடலாமென்ற புத்தி நம் அரசுக்கும் வராது. அவ்வரசின்கண் ணியம் அது. ஆனல் அத்தேச வரம்புட்பட்ட நிலத்தில் ஓரங் குலமும் பக்கத்தரசுக்கு நம்மரசு விட்டுக்கொடுக்குமோ? அது வுங் கிடையாது. நம்மரசின் ஆண்மை அது. பாரதமக்களுக்கா கப் பாரததேசமிருப்பதுபோற் பாரததேசத்துக்காகப் பாரத மக்களிருக்கிருரென்பதும் உண்மை. தம் உயிரைக் கொடுத்தாயி னும் அத்தேச வரம்பை அவர் காத்தேயாகவேண்டும். அது செய்யாத பாரதமகன் தேசத்துரோகியே. இனித், தமிழும் வரம்புடையது. அது தமிழருக்காகவேயிருந்தாலும் அவர் தம் நலனுக்காக அம்மொழியின் வரம்பைக் குலைக்கக்கூடாது. அவருந் தமிழுக்காகவேயிருக்கின்றனர். அவ்வறிவும் அவருக்கு வேண்டும். அம்மொழிக்கு வரம்பாவது அதன் இலக்கணம். 'இப்பசுந்தமிழ் ஏனை மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும்

(12ம் பக்கம் பார்க்க)



உ
சிவமயம்
பாலருவாயர் துணை

'அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து'

சந்தா:
உள்நாடு ரூ—3
வெளிநாடு ரூ—6

செட்டிநாடு

துன்முகி மாசி-10

விடைபெறுகிறோம்.

நாட்டுக்கோட்டை நகர வணிகப் பெருமக்களின் நல்லாதரவைப் பெரும்பாலாக எதிர்பார்த்தே சென்ற 1930-ம் ஆண்டில் நமது செட்டிநாடு இதழ் தொடங்கப்பெற்றது. பதிவு பெற்ற கூட்டுறவுத் தொழில் நிலையத்தின் நிர்வாகத்தில் செட்டிநாடு அச்சகமும் செட்டிநாடு இதழும் பத்தொன்பது ஆண்டுகள் இருந்து வந்தன. அந்தக் காலத்தில் ஏற்பட்ட ஏராளமான பொருள்நட்டம் அக்கூட்டுறவுத் தொழில் நிலையத்தைக் கலையும்படி செய்துவிட்டது.

பின்னர், அச்சகத்தைச் சென்னை உயர்நீதிமன்ற அனுமதிப்படி கூறப்பெற்ற ஏலத்தில் நமது நண்பர்களிற் பலர் தடுத்தும் கேளாமல், ஒருசில தனவணிகப் பிரமுகர்கள் 'செட்டிநாடு இதழ் நின்றுவிடுதல் கூடாது. நீங்கள் ஏற்று நடத்துதல் வேண்டும். எந்தநாளிலும் வேண்டிய உதவியை நாங்கள் செய்துதரச் சித்தமாயிருக்கிறோம்' என்று சொல்லியதை நம்பிக் கூடுதலான கிரயத்திற்கு எடுத்து இதுவரை பத்திரிகை நடத்தி வந்ததில், போட்ட பணத்திற்கு வட்டியும் உழைப்புக்கு ஊதியமும் கிடைக்காது போனதோடு, சுமார் ரூபாய் 8000 வரைநஷ்டமும்ஆகிவிட்டது. செட்டிநாடுஇதழுக்குச்செட்டியார்களின்

ஆதரவைவிடமற்றையோரது ஆதரவுதான்பெரும்பகுதியாக இதுவரை இருந்துவந்ததென்பதைவெட்கத்தோடுசொல்லிக்கொள்ளத்தான்வேண்டியதிருக்கிறது. இந்த நிலைமையில் இவ்விதழோடு நமதுஇதழ்நிறுத்தப்பெறுகிறது என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சென்ற புரட்டாசிவரை சந்தாச் செலுத்திய நேயர்கள் பின்னுள்ள நான்கு மாதங்களுக்கு ரூ **1-0-0**ம் முன்பாக்கியுள்ளவர்கள் அந்தப் பாக்கியைச்சேர்த்தும் இந்தஇதழைப் பார்த்ததும்அனுப்பி உதவும்படி வேண்டுகிறோம் இதற்காக இனிக் கடிதமெழுதும்படி வைத்து அஞ்சற்செலவு ஏற்படாது உதவிபுரியப்பெரிதும் அவர்களைவேண்டுகிறோம்.

மலர் **26**க்கு ஒருசில நேயர்கள் சந்தாச் செலுத்தியுள்ளார்கள். அவர்களுக்குத் தைமாதம் வரை உள்ள சந்தாப் போகப் பாக்கித் தொகையை மணியார்டரில் அனுப்பிவைக்க முடிவுசெய்துள்ளோம்.

இந்த வேளையில் மற்றொரு நற்செய்தியை நேயர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சிகொள்ளுகிறோம். அது, வரும் சித்திரைத்திங்கள்முதல் சமய வளர்ச்சி பற்றிப் பணிபாற்றும் புதிய பத்திரிகை யொன்று சைவப்பெருமக்களின் முயற்சியில் தொடங்கப்பெற இருப்பதாகும். அதன் வழியாக நமது எழுத்துப்பணி தொடர்ந்து நடைபெறுமென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தொழில்துறைத் திட்டங்கள்

1955-56ம் ஆண்டில், மத்திய வர்த்தகத்தொழிலியல்மந்திராலயத்தைச் சேர்ந்த பொருளாதாரப் பிரிவு, அந்நிய நாடுகளுடன் கூட்டாக நடத்தப்படும் 89 தொழில்துறைத் திட்டங்களுக்கு அனுமதியளித்திருக்கிறது,

(9ம் பக்கத் தொடர்ச்சி)

படுமோ' என்றது திருவிளையாடற் புராணம். அவ்வரம்பு நூல் தொல்காப்பியம். தனக்காகவே தமிழிருக்கிறது, தான் தமிழுக்காக இல்லையெனப் பிதற்றிக்கொண்டு தன் நலத்தைப் பெரிதெனக் கருதி அதற்காக அம்மொழியை வரம்பழித்துப் பயன்படுத்தித் திரியுந் தமிழன் அம்மொழிக்குச் சத்துருவே. இறுதியாக வுள்ளது சைவம். அது சைவருக்காகத்தா னிருக்கிறது. சைவசமயத்தின் வரம்பாவது யாது? எந்தச் சமயத்துக்கும் அதன் பிரமாண நூலே சமய வரம்பாகும். கிறிஸ்தவத்துர்குச் சமயவரம்பு பைபிள். இசுலாத்துக்குச் சமயவரம்பு குரான். அப்படியே பிறவுமாம். அந்நூல்களை அச்சமயங்கள் தம் கடவுள் வாக்கெனக் கூறிப் போற்றும். சைவசமயத்துக்கும் அன்னதொரு வரம்பு இருக்கத்தானே வேண்டும். அஃதெது? நூலியற்றுவோர் மூவகைப்படுவர். வஞ்சர், பிராந்தர், ஆப்தர் என்பாரவர். அவருள் வஞ்சராவார் தாமறிந்த சிலவுண்மைகளை மறைத்துப் பொதுமக்களிடமிருந்து நன்குமதிப்புப் பெறக் கருதி வேறு கூறித்திரிபவர். பிராந்தராவார் ஐய விபரீதங்களுக்கிரையாகி ஒன்றுகிடக்க ஒன்று கூறித் திரிபவர். அவ்விருவரையும் யாது ஆதாரவையும் பெற்றதே தமிழர்ச்சனைக் கொள்கை. ஆப்தரென்ற சொல் நம்பிக்கைக்குப் பாத்திரமானவரென்ற பொருளுடையது. தெள்ளறிஞரே அவர். அவர்தான் திருமுறையாசிரியன்மார் முதலியோர். அம் மூவகையினரும் ஆன்மாக்களே யாக, அவ்வாசிரியன்மார்மாத்திரம் எதனால் ஆப்தராயினர்? சிவபிரானொருவரே முழுமுதற் கடவுள். அவராணையிற் சிறிதும் பிசகாமல் நின்றொழுகினர் அப்பெருமக்கள். அவரறியாமை அறவே நீங்கியது. அவர்பால் அப்பிரானாரின் திருவருள் முழுக்கப்பதிந்தது. அதனால் அவர் தெள்ளறிஞராய் விருப்பு வெறுப்பற்ற தூயராய் ஆப்தருமாயினர். அவர் திருவாய் மலர்ந்தன வெல்லாம் ஆப்த வாக்கியமாகும். அவரை யாட்கொண்ட பரமசிவனார் பரமாப்தர். அவராணைதான் பரமாப்த வாக்கியம். சம்ஸ்கிருதத்திலுள்ள இருக்காதி நான்கு வேதங்களும், காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங்களும் அவ்வாக்கியம். அவ்வுண்மையை அவ்வாசிரியன்மாரே தம் திருமுறைகளிற் பலபட விளக்கினர். சைவத்துக்கு அவ்வேத சிவாகமங்களே பிரமாணசாத்திர

மாகிச் சமயவரம்பாயின, திருமுறையாதியன அவற்றின் வழி வந்து அன்னவாயின. [சைவசமயம் சைவமக்களுக்காக இருந்தாலும் அச்சமய வரம்பு அழியவருமாயின் அம்மக்கள் தம்உயிரைக் கொடுத்தாயினும் அவ்வரம்பைப் போற்றியாக வேண்டும். அது செய்யாத சைவன் அச்சமயத்தை உள்ளிருந்தே கெடுக்கும் பகைவனுவான். ஆகவே சைவமக்கள் சைவத்துக்காகவு மிருக்கிருரென்பதை யறிக. எல்லாந் தமக்காகவே யிருக்கின்றன வெனச் சொல்லிக்கொண்டு தாமிருப்பது எதற்காக வென்பதை உணராமலலேவது நாடோடிகள் செயலாகும். நவீனர் பொறுப்புணர்ந்து பேசக் கற்றுக்கொள்வாராக.

புதுப்பஞ்சாங்கம்

இட்டமொழி பஞ்சாங்க கணிதர் திரு, சிவசூரியநாராயண பிள்ளையவர்களால் சைவாநுட்டானத்திற்கேற்பக் கணிக்கப் பெற்ற ஏவிளம்பி வருடக் கலைமகள் வாக்கியப் பஞ்சாங்கம், சைவப்பெருமக்கள் வீடுகளில் இருக்கவேண்டியது. வெளியிட்டோர்: ஸ்ரீமகள் கம்பெனி, 122 வூரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1

சிவபூசா துரந்தரர் மாநாடு

திருவண்ணுமலை பஞ்சபூதஸ்தலங்களுள் நடுவணதாகிய தேயுஸ் தலம். சிவபெருமான் அக்கினி ஸ்தம்பமாய்த் தோன்றி யருளிய தலம். இங்ஙனம் தோன்றிய அவதாரம் இலிங்கோற்பவ மூர்த்தி என்றும், தோன்றிய காலம் சிவராத்திரி-இலிங்கோற்பவகாலம் என்றும் கூறப்படும். இச்சிறப்புப்பற்றி இத்தலத்து இவ்வாண்டுச் சிவராத்திரியில் தொடங்கப்பெறும் சிவபூசைச் செல்வர் மாநாட்டிற்குச் சிவத்திரு ஈசான சிவாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமை தாங்கவும் விரும்பும் அன்பர்கட்குச் சிவதீக்ஷை செய்விக்கவும் இசைந்துள்ளார்கள். உபதேசம் பெறும் அன்பர்கள் அங்கு வந்து தீக்ஷைபெற்றுக்கொள்ளும்படி ஸ்ரீசாது அருணுசல சுவாமிகள் தெரிவிக்கிருர்கள்.



திருமந்திர மாநாட்டு மலர்:- திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் மன்மத தை மாதத்தில் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகளின் குருபூசையை யொட்டி நிகழ்ந்த மூன்றாவது திருமந்திர மாநாட்டு நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளின் சுருக்கமும் இதில் இடம்பெற்றுள்ளன. சொற்பொழிவாளர்கள் தமது நீண்டநாள் அநுபவத்தைக் கொண்டு வேதாகம சாத்திர தோத்திர வரம்பிலே நின்று திரட்டி வெளியிட்ட கருத்துக்களை அனைவருக்கும் பயன்படும்படி நூல் வடிவில் உதவிய அருளிப்பாட்டுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

இரத்தின சபாபதி மாலை:- திருவாவடுதுறை ஆதீன வெளியீடு எண் 99. இருபதாவது மகாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாணதேசிக மூர்த்திகளின் ஐந்தாவது குருபூசை விழா மலராக ஆதீன வித்துவான் த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பரிசோதித்து எழுதிய முகவுரையுடன் வெளியிடப்பெற்றது.

கோடிக்கவி, உண்மைநெறி விளக்கம், குறிப்பு விளக்கக் கட்டுரைகள்:- திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. எண் 101. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டருளியபடி ஆதீன வித்துவான் திரு, தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் எழுதியது.

வினா வெண்பா விளக்கக் கட்டுரை:- திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. எண் 102. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டருளியபடி ஆதீன வித்துவான் திரு தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் எழுதியது,

திருமந்திரம்—வைத்தியப்பகுதி:- திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. எண் 104. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம் திருப்புகழ் தா. ப. வேங்கடசுப்பிரமணியன் அவர்கள் எழுதிய உரையுடன் வெளியிடப்பெற்றது.

திருமந்திரம், பாயிரம்:- திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. எண் 105. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின்வண்ணம் பஞ்சாட்சர தீபம் என்னும் உரையுடன் வெளியிடப்பெற்றது.

திரு இரும்பூளை

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகளின் பாடல் பெற்றதும், ஆலகால விஷத்தையுண்டு தேவர்களை ரக்ஷித்ததும், சுகப்ருமமரிஷியால் துதிக்கப் பெற்றதும், அமிர்த புஷ்கரணியால் சூழப்பெற்றதுமான திரு இரும்பூளை என்னும் ஆலங்குடியில் 21-3-57 வியாழக்கிழமை அனுஷ நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் காலை 8-மணிக்கு மேல் 10மணிக்குள்ளாக மஹன்யாஸபூர்வமாய் அபிஷேக ஆராதனைகளும், சுவாமிக்கு பஞ்சமுக அர்ச்சனையும் ஸ்ரீ தெக்ஷிணாமூர்த்தி சுவாமிக்கு விபூதி அபிஷேகமும், ஸ்ரீவள்ளியம்மை தெய்வயானையம்மை சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு ராஜாலங்காரமும் நடைபெறும்.

உணவுத் தானியங்கள் இறக்குமதி

இவ்வருஷ இறுதிக்குள்ளாக இந்தியா வெளிநாடுகளிலிருந்து மொத்தம் 18,00,000 டன் உணவுத்தானியங்களை, இறக்குமதி செய்துவிட்டிருக்கும்.

கனி இரும்பு உற்பத்தி

இந்தியாவில் கனிஇரும்பு உற்பத்தி, 1956 ஆகஸ்ட் மாதத்தில் 3,18,583 டன்னாக இருந்தது 1956 செப்டம்பரில் 3,32,014 டன்னுக்கு உயர்ந்து விட்டது.

திருவாவடுதுறைக் குருபூசை

திருக்கயிலாயபாம்பரை திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதம பரமாசாரியர் ஸ்ரீபஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் குருபூசை விழா 28-1-57 முதல் 6-2-57 வரை சிறப்பாக நடைபெற்றது. முதல் மூன்று நாட்களிலும் ஆதீன மடாலயக் கொலுமண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருமுன்பு நான்காவது ஆண்டு திருமந்திர மாநாடு முறையே டாக்டர், நடராசன், கருமுத்து, தியாகராசச்செட்டியார், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகியோர் தலைமையில் பேரறிஞர்கள் விரிவுரையாற்ற நடந்தேறியது.

31-1-57 முதல் 5-2-57 வரை குருபூசைவிழாச்சொற்பொழிவுகள் ஆதீன வித்துவான்களாலும் அறிஞர்களாலும் நிகழ்த்தப் பெற்றன. 6வ மாலையில் இசையரசு எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் இசையரங்கு நிகழ்ந்தது. மூன்றாவது திருமந்திர மாநாட்டு மலரும், திருமந்திரம்-பாயிரம் பஞ்சாட்சரதீபம் உரையும், திருமந்திரம்-மருத்துவப்பகுதி உரையும் திருமந்திர மகாநாட்டு வெளியீடுகளாக வெளியிடப்பெற்றன.

வழக்கம்போல் குருபூசைக்கு முந்திய நாட்களிலும் 6வ குருபூசை அன்றும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஒடுக்கத்திலும், கொலுமண்டபத்திலும் அருட்கொலு வீற்றிருந்து அடியவர்களுக்கும், அன்பர்களுக்கும் திருநீறு வழங்கி ஆசீர்வதித்தார்கள். 6வ காலையில் ஞானமா நடராசமூர்த்தியாருக்கும் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகளுக்கும் விசேட பூசைகள் நிகழ்ந்தபிறகு மாகேஸ்வரபூசை பிராமண போஜனம், ஏழைகளுக்கு அன்னதானம் ஆதியன நடைபெற்றன. இரவு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடியவர்களும் பிரமுகர்களும் புடைசூழப் பட்டணப் பிரவேசம் வந்த காட்சி கண்கொள்ளாக் கவினுடையதாக விளங்கியது. புலவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பொன்னாடை, பட்டாடைகளும் வெண்பொற்காசுகளும் வாரி வழங்கி ஈத்துவக்கும் இன்பம் கொண்டவர்களாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் விளங்கினார்கள்.

தொடர் நாடகம்:

தியாகச்சுடர்

சித-சேதுராமன்

(முன்தொடர்ச்சி)

தேன்: ஆ! நீயா! மோசக்காரா. என்னை விட்டுவிடு.

குமார்: விட்டுவிடவா இவ்வளவு சிரமப்பட்டுத் தூக்கிவந்தேன்.

தேன்: (மாணிக்கம்பிள்ளையைப்பார்த்து) ஐயா! நீங்களுமா இதைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மகள் இப்படி ஆபத்தில் சிக்கித்தவித்தால் சும்மா இருப்பீர்களா? கருணை காட்டுங்கள். இரக்கம் காட்டி என்னை விட்டுவிடுங்கள். (காலில் விழுந்து கெஞ்சுகிருள்-)

மாணி: உனக்குரியவனை- உன்மாமனை மணப்பதாக ஒப்புக்கொள் உன்னை விட்டுவிடுகிறேன். இல்லையேல் ஆகாரம்கூட இல்லாமல் நீ இங்கு சாகவேண்டியதுதான்.

தேன்: முடியாது. என் உயிர்போனலும் பரவாயில்லை.

குமார்: பத்தினித்தெய்வம் பாண்டியனைத்தவிர வேறு யாரையும் மணஞ்செய்து கொள்ளமாட்டாள். கிடக்கட்டும் பிள்ளைவாள். தானுக வழிக்குவருவாள்.

[தேன்மொழி தப்பிச்செல்ல முயலுகிருள் குமார் கவனித்து விடுகிருன்.]

குமார்: எங்கே ஓடப்பார்க்கிருய். இங்கிருந்து தப்பிச்செல்ல முடியாது.

[அப்பொழுது திடீரெனப் பாண்டியன் தோன்றுகிருன்.]

குமார்: நீயும் வந்துவிட்டாய் இக்குண்டுக்குப் பலியாக. கிட்ட வந்தால் இத்துப்பாக்கிக்கு இரையாகி விடுவாய்.

பாண்: சாவுக்கு அஞ்சி நடுங்கும் உம்போன்ற கோழை இல்லை இப்பாண்டியன். நெஞ்சிலே உரம் இருக்கிறது சாகும் அளவு போராட. கையிலே வலிமை இருக்கிறது உன்போன்ருர்க்குத் தக்கபாடம் கற்பிக்க. விட்டுவிடு தேன்மொழியை.

குமார்:- மறத்தமிழர் பரம்பரையில் பிறந்த மாவீரனே! (துப்பாக்கியைக் காட்டிக்கொண்டே பேசுகிருன்) வா பாண்டியா உன் ஆசைநாயகியை-அன்பின் உறைவிடத்தை-காதலின் சுடரைக் காக்க வா. ஏன் திகைக்கிருய்! போர்க்களத்தில் புறமுதுகு காட்டித் தன்மகன் இறந்தான் என்ற செய்திகேட்ட தாய், ஆருச் செற்றம்கொண்டு, கையில் வாளேந்தி: இது உண்மையானல் அவனுக்குப் பாலூட்டிய என் மார்பகத்தை அறுத்தெறிவேன் என்று மார்தட்டிப் பேசிய தாய்க்குலத்தில் தோன்றிய வீரரே! வருக.

[இச்சமயம் சரளா போலீசுடன் உள்ளே வருகிருள். போலீசைக் கண்ட குமார் பாண்டியனைச் சுடுகிருன். அப்போது குறுக்கிட்டு மடிகிருள் சரளா. திகைக்கிருன் குமார்.)

மாணிக்கம்பிள்ளை:- (திகிலுடன்) மகளே! சரளா. உன் நன்மைக்கல்லவோ இந்த ஏற்பாட்டைச் செய்தேன். உன்னையும் பாண்டியனையும் மணப் பந்தலில் காணலாம் என்று கற்பனைக் கடலில் மூழ்கினேனே! அந்த எண்ணத்தில் மண்ணைப்போட்டு விட்டாயா அம்மா! உயிருக்கு உயிராக வளர்த்தேனே இதற்காகவா. தந்தையின் கொடுமைகளைக் காணச் சகியாது போய்விட்டாயா; ஏழைகள் கண்ணீரால் சம்பாதித்துப் பொருள் சேர்த்தேன் நீ சிறப்புடன் வாழ்வாய் என்றுதானே. அப்பா என்றழைக்கும்போது என் உள்ளம் குளிருமே! இனி யாரம்மா என்னை அப்பெயரிட்டழைப்பது, (குமாரை நோக்கி) அடப் பாவி! வளர்ந்துவரும் என் மகளுக்குத் தாயில்லாக் குறையைப் போக்க அல்லும் பகலும் கண்மணிபோன்று வளர்த்தேனே! ஒரு விஞடியில் கொன்றுவிடவா? என் தனிமையில் தவிக்கவிட்டு -என் மகளைப் பிரித்துவிட்டாயடா. உன்ஞல் என் குலக் கொழுந்தை-குடும்பத்தில் வீசிய தென்றலை இழந்து விட்டேன். (என்று கதறியவண்ணம் சரளாமீது விழுகிருர்)

சரளா:- அப்பா! இனிமேலாவது நல்லமுறையில் வாழுங்கள். தேன்மொழி எதிரியாக-பாண்டியன் ஆசைக்கு இடையூருக நிற்க விரும்பவில்லை. தேன்மொழியை இன்றுமுதல் நீங்கள்தான் காப்பாற்றவேண்டும் இதுதான் என் இறுதி ஆசை நிறைவேற்

றுங்கள் அப்பா. அப்பொழுதுதான் என் உயிர் அமைதியாகப் பிரியும்.

மாணி:- சரியம்மா! நிச்சயம் நிறைவேற்றுவேன். நீ இறந்த பிறகு எனக்கு இவ்வுலகிலே ஒன்றுமேயில்லையம்மா! இனிமேல் என் சொத்துக்கள் யாவும் தேன்மொழிக்கே!

சரளா:- (துரைசாமிபிள்ளையிடம்) இதயம்படைத்த பெரியவரே! தேன்மொழி மிகவும் நல்லவள். பெண்டிர் குலத்திற்கே அணையாத ஜோதி! அவள் இன்றுமுதல் என் சகோதரி. பாண்டியனுக்கே அவளைத் திருமணம் செய்வித்து மகிழுங்கள்.

துரை:- மனிதனுக்கு மனிதன் தாழ்ந்தவன் உயர்ந்தவன் இல்லை மனிதர்களிடையே வேறுபாட்டை ஏற்படுத்துகின்ற என்னுடைய ஜாதிப்பித்து இன்றோடு அழிந்தது. வேசிகுலத்தில் பிறந்தவள் என்றெல்லாம் ஏசினேனே அவளது குணம் அறியாமல். அவள் சிறந்த உத்தமி. எனக்கேற்ற மருமகள்.

[சரளா, பாண்டியனையும் தேன்மொழியையும் ஒன்றுகூட்டி நீங்கள் இருவரும் இல்லறத்தைச்செம்மைப் படுத்தி வாழ்வீர்...க ....ளா....க. உயிர் பிரிந்தது. காதலர்கள்வணங்கி நின்றனர். குற்றவாளிகளைப் போலிசார் அழைத்துச்சென்றனர்.[முற்றும்]

அம்மோனியம் சல்பேட் உற்பத்தி

இந்தியாவில் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி 1946ல் மொத்தம் 22,450 டன்னாக இருந்தது 1955ல் 3,93,100 டன்னாக உயர்ந்துவிட்டது.

உபகாரச் சம்பளங்கள்

வெளிநாட்டு மாணவர்களுக்குக் கலாசார உபகாரச் சம்பளங்கள் வழங்குவதற்காக இந்திய சர்க்கார் 1955-56ல் 4,97,352 ரூபாய் செலவழித்துள்ளனர்.

சிங்கப்பூர்

27-1-57 பிற்பகல் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில் கொலு மண்டபத்தில் சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்க 26வது ஆண்டு மகாசபைக்கூட்டம் நடைபெற்றது. இறைவணக்கத்திற்குப்பின் மகாசபைக்கூட்டத்திற்கு அங்கிய ஊர்களிலிருந்து வந்தவாழ்த்துச்செய்திகள், கடிதங்கள் வாசிக்கப்பெற்றன. சங்கத்தின் ஆண்டு அறிக்கை வாசித்து முடிந்தபின்னர், சிங்கப்பூர் திரு, மு வ முத்துக்கருப்பன் செட்டியார் அவர்கள், நகரத்தார்கள் மலாயா தேசத்தில் தொழில்ஸ்தாபனங்கள் நிறுவ வேண்டியதன் முக்கியத்துவத்தைத் தகுந்த மேற்கோள்களுடன் விளக்கினார்கள்.

அடியிற்காணும் சங்க உத்தியோகஸ்தர்களும், நிர்வாகசபை அங்கத்தினர்களும் 1957ம் ஆண்டிற்கு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். தலைவர்: அ அரு சொக்கலிங்கம் செட்டியார், உபதலைவர்: மெ பெ மு மெய்யப்பசெட்டியார், காரியதரிசி: லெ அ அ நா மு அழகப்பசெட்டியார், உதவிக்காரியதரிசி: அரு பழ அருணசலம்செட்டியார், பொக்கிஷதார்: அரு சா அரு கருப்பஞ்செட்டியார், கணக்குப் பரிசோதகர்: பெரி அ மு மாணிக்கம் செட்டியார்.

நிர்வாகசபை அங்கத்தினர்கள்: ராம வீர பெரியகருப்பஞ் செட்டியார், சொ நா சொ மெய்யப்பசெட்டியார், கண செ கண அண்ணாமலை செட்டியார், அரு மு அரு அருணசலம்செட்டியார், ந பழ சித முவ அண்ணாமலைசெட்டியார். கரு தெ வேலாயுதம் செட்டியார்.

சர்க்கார் விடுதி

பழங்குடி மாணவர்களுக்காக இந்திய சர்க்கார் ஷில்லாங்கில் மொத்தம் 1,40,000 ரூபாய் செலவில் விடுதியொன்றைக் கட்டியுள்ளனர்.

—: ஏல விளம்பரம் :—

தேவகோட்டை, சப் கோர்ட்டு

E. P. 326 of 56 O. S. 56/55

பாலகவி *V.* இராமநாதன்செட்டியார்—வாதி
ஜெகன்னாதஆசாரி *and 3 others*—பிரதிவாதிகள்

மேற்படி பிரதிவாதிகளுக்குப் பாத்தியமான காரைக்குடியிலிருக்கும் தனலெக்ஷிமி என்ஜினியரிங் ஒர்க்ஷாப்பில் உள்ள மிஷினரி சாமான்களான ஆறு அடி இங்கிலீஷ் ஹைஸ்பீடு லேத்து, நாலரை அடி அமெரிக்கன் லேத்து முதலிய ஜங்கம சாமான்களை மேற்படி ஒர்க்ஷாப்பிலேயே சப்கோர்ட்டு ஆபீஸர் அவர்களால் **28-2-1957**உ யன்று பகல் **12** மணி முதல் **5** மணிக்குள் ஏலம் போடப்படும் என்பதை இதன் மூலம் அறிவித்திருக்கிறது.

தேவகோட்டை
8-2-57

D. S. ராஜகோபாலய்யர்
வாதிஅட்வகேட்

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை
செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.